[11th March 1961

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : I feel very great reluctance to hear hon. Members arguing for and against. Is it not a fact that after this Director has taken charge, the rural health centres have improved very much and more doctors are going to primary health centres?

THE HON. SRI M. A. MANICKAVELU : This is quite correct, Sir.

River pumping schemes

* 760 *Q.*—SRI M. P. SARATHI : கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-61-ல் விவசாயத்துக்கு ஆற்றின் அடி நீரை எடுத்துப் பயன் படுத்தும் திட்டங்கள் (River pumping schemes) எத்தனை உள்ளன ?

(இ) எத்தனை நிறைவேற்றப்பட்டுள்ளன ? எங்கெங்கு ?

(உ) பாலாற்றில் எங்கெங்கு திட்டமிடப்பட்டுள்ளன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Six schemes.

(*b*) One scheme at Ooradiambalam, Thanjavur district.

(*c*) Nil. No scheme is proposed in Palar.

SRI S. M. ANNAMALAI : எங்கள் மாவட்டத்தில் பாலார் பேசின் ரூல்ஸ் இருப்பதால் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறதென்று காரணம் காட்டியும், செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆட்சேபணை செய்கிறார்கள் என்று சொல்லியும், எந்தவிதமான திட்டத்தையும் நிறைவேற்றாமல் இருக்கிறார்கள். ஆகையால் பாலார் பேசின் ரூலை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆட்சேபணை செய்கிறார்கள் என்ற நிர்ப்பந்தம் ஏற்படவில்லை. ஊற்றுகள் ரொம்ப குறைச்சலாக இருக்கும்போது இப்பொழுது கொடுத்தால் ஏற்கனவே உள்ளவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று விதிகளில் இருக்கிறது. இதை ஓரளவு தளர்த்துவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

Medical College, Madurai

* 761 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை வைத்திய கல்லூரியில் க்ஷயரோகம் பற்றி போதிக்க ஆசிரியர் நியமிக்கவில்லையா ?

(இ) எந்த டாக்டராவது க்ஷயரோகம் பற்றி இலவசமாகப் போதிக்க முன் வந்தாரா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The post is vacant from 30th June 1960 afternoon, as the incumbent of the post has been sent for post-graduate course in M.D. (General Medicine).

(*b*) The Honorary Assistant Medical Officer, Tuberculosis Department, Erskine Hospital, Madurai, applied for appointment as Honorary Lecturer in Tuberculosis in the Madurai Medical College. This offer could not be accepted as the sanctioned post of Lecturer in Tuberculosis in the college is expected to be filled up shortly and as there is no post of Honorary Lecturer in Tuberculosis in the College.

Power supply

* 762 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கேரள ராஜ்யத்திற்கு நம் மாநில சர்க்கார் 8,200 கிலோ வாட் மின்சாரம் நீடித்து சப்ளை செய்ய சம்மதித்திருக்கிறதா ?

(இ) அப்படியானல், எத்தனை ஆண்டுகளுக்கு இது நீடிக்கும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir, but the actual supply that is being given at present is 9,896 K.W.

(*b*) The present rate of supply of 9,896 K.W. will be continued fora period of ten years from the 1st November 1956, unless the Kerala Government discontinue taking such supply earlier.

SRI A. VEDARATHNAM : ஸார், இந்த ஏற்பாடு எதற்காகச் செய்யப்பட்டது? இப்பொழுதுள்ள ஏற்பாட்டைக் காட்டிலும், 8,000 சொச்சம் கிலோ வாட்டுக்குப் பதில் 9,000 கிலோ வாட்டுகள் கொடுக்கும் அவசியம் என்ன? இதன் மூலமாக நம்முடைய மாகாணத்திற்கு ஏற்பட்டிருக்கும் அனுகூலம் என்ன என்பதை அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : மாகாண சீரமைப்பின் போது, கேரள ராஜ்யத்திற்கு நம் ராஜ்யத்திலிருந்து மலபார் ஜில்லாவிற்குத் தேவையான மின்சார சக்தி கொடுக்க வேண்டுமென்று கேரள அரசாங்கம் அன்றைக்கு நம் அரசாங்கத்துடன் விவாதம் நடத்தி மின்சக்தி வேண்டுமென்று கேட்டார்கள்; நாம் அடுத்து வரும் 10 வருஷங்களில் வருஷத்திற்கு 10,000 கிலோ வாட் வீதம் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்துகொண்டோம். அதன்பிரகாரம் இது கொடுக்கப் படுகிறது.

SRI M. KALYANASUNDARAM : நம் ராஜ்யத்தில் எந்தப் பகுதிக்காவது கேரள ராஜ்யத்திலிருந்து மின்சாரம் பெறப் படுகிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : கேரள ராஜ்யமும் நம் மாகாணத்திற்கு மின்சாரம் கொடுத்துக்கொண்டு இருக்கிறது. ஆனல், அது கொஞ்சம்.